# காஞ்சிபுரம் மாவட்டம்

## முதலாம் திருப்புதல் தேர்வு - 2024

## 11 - ஆம் வகுப்பு வணிகவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 20 X 1 = 20 | | |
|---|---|---|
| 1 | இ | பாண்டியர் |
| 2 | அ | உற்பத்தி தொழில் |
| 3 | ஆ | தனியாள் வணிகம் |
| 4 | அ | ஒப்பந்தத்தால் |
| 5 | ஆ | சேவை நோக்கம் |
| 6 | அ | மைய வங்கி |
| 7 | இ | வழங்கல் |
| 8 | அ | தன்னிச்சை ஒப்பந்தம் |
| 9 | இ | நேர்மையான நன்னெறி நடத்தை |
| 10 | ஈ | தொழில் நிறுவனத்திற்குள் திரட்டப்படும் நிதி |
| 11 | ஆ | அந்நியச் செலாவணி மாற்று பத்திரம் |
| 12 | இ | இரண்டு |
| 13 | அ | பன்னாட்டு வியாபாரம் |
| 14 | அ | அகற்றீட்டு முகவர் |
| 15 | ஆ | பொதுக்குழு |
| 16 | இ | அ மற்றும் ஆ இரண்டும் |
| 17 | இ | அறுதியிட்டுக் கூறுதல் மற்றும் தகுதியற்றது |
| 18 | ஈ | ஒப்பந்தத்திற்கு மூன்றாம் நபர் |
| 19 | ஆ | முந்தைய ஆண்டு |
| 20 | இ | ஜூலை 1, 2017 |

### பகுதி - ஆ

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

**21. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன?**

- இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.

**22. நிறுமத்தின் பல்வேறு வகைகள் யாவை?**

1) கூட்டுருவாக்கத்தின் அடிப்படையில்:
   அ) பட்டய நிறுமங்கள் ஆ) சட்டபூர்வ நிறுமங்கள் இ) இலாபம் நோக்கம் இல்லா நிறுமங்கள்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

2) உறுப்பினர்களின் அடிப்படையில் :
   அ) தனியார் நிறுமம் ஆ) பொது நிறுமம்
3) பொறுப்பின் அடிபடையில்
   அ) பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமங்கள்
   ஆ) பொறுப்புறுதியால் வரையறை செய்யப்பட்ட நிறுமங்கள்
   இ) வரையறாப் பொறுப்புடைய நிறுமங்கள்
4) கட்டுப்பாட்டின் அடிப்படையில் :
   அ) அரசு நிறுமங்கள் ஆ) பிடிப்பு நிறுமங்கள் இ) துணை நிறுமங்கள்
5) தேசிய இனத்தின் அடிப்படையில்:
   அ) உள்நாட்டு நிறுமங்கள் ஆ) அயல்நாட்டு நிறுமங்கள் இ) பன்னாட்டு நிறுமங்கள்

**23. கூட்டுறவு கடன் சங்கம் என்றால் என்ன ? / ~~கடன் கூட்டுறவு விளக்குக~~?**

- உறுப்பினர்களுக்கு குறுகிய கால கடன் வழங்குதலில், தேர்ச்சி பெற்ற சங்கம், கூட்டுறவு கடன் சங்கம் ஆகும்.
- வேளாண்மையினர், கைவினைஞர்கள், தொழில் புரிபவர்கள், ஊதியம் ஈட்டுகிறவர்கள் போன்றவர்களுக்கு, கடனளிக்கும் உன்னத பணியை, கூட்டுறவு கடன் சங்கங்கள் செய்து வருகின்றன.

**24. சேவைத் தொழில்களில் உள்ள சேவைகள் யாவை?**

- கல்வி, மருத்துவம், சுகாதாரம், வங்கியியல், போக்குவரத்து, காப்பீடு

**25. தனி உரிமம் பெற்றவர் என்பவர் யார்?**

- ஒரு வியாபார நிறுவனத்தில், அதன் வாணிப நடவடிக்கைகளைக் மேற்கொள்ளும் அனைத்து உரிமையையும், தொடர் உறவு முறையின் அடிப்படையில், ஒருவருக்கு வழங்கப்படுமாயின், அந்த நபரை தனிமையாளன் அல்லது தனி உரிமம் பெற்றவர் என்று அழைக்கிறோம்.

( அல்லது )

- ஒரு வியாபார நிறுவனத்தின் வணிகக் குறியீட்டை, சட்டப்படி பயன்படுத்தும் உரிமம் பெற்ற ஒரு தனி நபரை தனி உரிமம் பெற்றவர் என அழைக்கிறோம்.

**26. பெருநிறுவன ஆளுகை இலக்கணம் தருக**

- “பெருநிறுவன ஆளுகை என்பது எந்த ஒரு நிறுமத்தையும் செம்மையாக இயக்கி, திறம்பட வழிநடத்தி, கட்டுப்படுத்த உதவும் ஒரு அமைப்பு முறை”. - கேட்பரி குழுமம்.

( அல்லது )

- “பெருநிறுவன ஆளுகை என்பது, சம்பந்தப்பட்ட தொழில் அமைப்பில் நேர்மை, வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புத் தன்மை போன்றவற்றை மேப்படுத்தும் ஒரு செயல்” - உலக வங்கி

**27. தானியங்கி விற்பனை எந்திரங்கள் என்றால் என்ன?**

- தானியங்கி விற்பனை எந்திரம் என்பது, எந்திரம் வழியாக பொருள்களை நேரடியாக வாடிக்கையாளருக்கு பொருள்கள் விற்கும் எந்திரம் ஆகும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

28. சரக்காணையின் வகைகளை குறிப்பிடுக.

1) வெளிப்படை சரக்காணை
2) வரையறுக்கப்பட்ட சரக்காணை
3) உறுதி செய்யும் சரக்காணை

29. வாணிப சமநிலை என்றால் என்ன?

- வாணிப சமநிலை என்பது, ஒரு வருடத்தில் ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிப்பதாகும்.

30. முழுவதும் வரி விலக்கிற்குட்பட்ட வருமானம் எது ?

- வேளாண் வருமானம்

## பகுதி - இ

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள் யாவை?

1) கொற்கை
2) சாலியூர்
3) காயல்பட்டினம்
4) மருங்காவூர்பட்டினம்
5) குமரி

32. தனியாள்வணிகத்தின் குறைபாடுகளை விவரி. ( ஏதேனும் 3 )

1. அளவான மூலதனம்
   - தனியாள் வணிகரின் மூலதனம் வரையறுக்கப்பட்டது.
   - எனவே, அதிகமான மூலதனம் தேவைப்படும் தொழிலை, இவரால் துவங்க இயலாது.
2. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறன்
   - வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் தனி ஒரு மனிதரால் மட்டுமே நடத்தப்படுகின்றது.
   - இந்த வரையறுக்கப்பட்ட மேலாண்மைத் திறமையே அவரின் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வதைத் தடைசெய்கிறது.
3. வரையறாப்பொறுப்பு
   - தனி வணிகரின் பொறுப்பு என்பது வரையறுக்கப்படாதது.
   - கடனீந்தோர்கள் தமது கடன்களைத் தனியாள் வணிகரின் சொந்தச் சொத்துக்களிலிருந்தும் சரிக்கட்டிக் கொள்ள வாய்ப்பு இருப்பதால், தனிநபர் தன் சொந்த சொத்துக்களை இழக்க வாய்ப்பு உள்ளது.
4. சிறப்புத் தேர்ச்சியின்மை
   - தனியாள் வணிக அமைப்பு சிறிய அளவில், இருப்பதால் அதன் நிதி ஆதாரம் வரையறுக்கப்பட்டது.



   - போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால், பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களை பணியமர்த்த இயலாது.
   - எனவே, அவர் ஒருவரே அனைத்து பணிகளையும் கையாள முடியாது.
   - இதன் விளைவாகத் திறமைக் குறைவு ஏற்படும்.
5. அவசர முடிவு
   - அவசர முடிவுகள் நிறுவனத்திற்கு, நன்மை பயப்பதாக இருந்தாலும், சில நேரங்களில் வியாபாரத்தை அழிவுப் பாதைக்கு செல்ல வழி வகுத்துவிடும்.

33. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

- குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை 2 பேர்
- அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 பேர்

34. பொது கழகங்கள் என்றால் என்ன?

- பொதுகழகம் என்பது, பாராளமன்றமோ சட்டமன்றமோ இயற்றும் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு தன்னாட்சியுரிமை பெற்ற நிறுவனமாகும்.

35. உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்பு ( RTGS ) பற்றி ஒரு குறுகிய குறிப்பு வரைக.

- இது 2013 இல், இந்திய ரிசர்வ்வங்கியால் தொடங்கப்பட்டது.
- பரிவர்த்தனைகள் உண்மையான நேரத்தின் அடிப்படையில் தீர்க்கப்படுகின்றன.
- மற்ற எந்த நடவடிக்கைகளையும் தொகுக்காமல் ஒரு வங்கிக்கும் மற்றொரு வங்கிக்கும் இடையே, ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் தீர்வு காணப்படுகிறது.
- RTGS வசதி வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் 2.00 மணி வரையும் கிடைக்கின்றன.
- RTGS பரிமாற்றங்கள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் வங்கி விடுமுறை நாட்களில் அனுமதிக்கப்படுவதில்லை.
- RTGS பரிவர்த்தனைக்கான குறைந்தபட்ச வரம்பு ரூபாய்.2 லட்சம் ஆகும்.

36. பன்னாட்டு நிறுமங்கள் இந்தியாவிற்கு தேவையா? ( ஏதேனும் 3 )

- பன்னாட்டு நிறுமங்கள் இந்தியாவிற்கு தேவை என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. அவைகள் பின்வருமாறு :
  1. இந்தியாவில் மிகப் பெரிய சந்தை வாய்ப்பு இருப்பது
  2. உலக அளவில், பொருளாதாரத்தில் மிக வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில், இந்தியா முக்கிய இடத்தைப் பெறுகிறது
  3. அரசின் சாதகமான கொளகைகள் மூலம் அன்னிய நேரடி முதலீடு பெருமளவு இந்தியாவிற்கு வருவது
  4. 1991 - ஆம் ஆண்டிற்கு பிறகு இந்தியா பின்பற்றிவரும் தாராளமயமாக்கல் கொள்கை
  5. அரசு கொள்கைகளை தளர்த்தி அதன் மூலம் பன்னாட்டு முதலீட்டை ஈர்க்க தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவது.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

37. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுது.

1. மொத்த வியாபாரிகள், உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
2. இவர்கள், பொருட்களை மொத்தமாக வாங்கி, சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
3. இவர்கள், ஒரு குறிப்பட்ட பொருளின், பல்வேறு வகைகளை விற்பனை செய்கினறனர்.
4. பொருட்களை விநியோகம் செய்ய, முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.
5. சில்லறை வியாபாரிகளுக்கு, இவர்கள் கடனுதவி அளிக்கின்றனர்.
6. உற்பத்தியாளர்களுக்கும், இவர்கள் நிதியுதவி செய்து தருகின்றனர்.

38. கப்பல் தலைவர் ரசீது என்றால் என்ன?

- கப்பல் தலைவர் அல்லது அவரது உதவியாளர் கப்பலில் சரக்கு பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதாரமாக வழங்கப்படும் ரசீது, கப்பல் தலைவர் ரசீது ஆகும்.

39. மூலதன கணக்கின் உள்ளடக்கங்கள் யாவை?

1) தனியார் மூலதனம்
2) பங்கு மூலதனம்
3) அலுவல் சார்ந்த மூலதனம்

40. போல்வு ஒப்பந்தம் பற்றி குறிப்பு வரைக

- இது சட்டத்தால் உருவாக்கப்படும் ஒப்பந்தம் ஆகும்.
- பொதுவாக இது ஒப்பந்தமே இல்லை.
- ஒரு நபர், ஒருவரின் இழப்பால் மற்றொருவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் ஆனது

( அல்லது )

- ஒரு தரப்பினர் வேண்டுகோளுக்கு இணங்க மற்றொரு தரப்பினர் இடையே ஏற்படும் தன்னிச்சையான ஒப்பந்தம் போல்வு ஒப்பந்தம் ஆகும்.
- இது சட்டத்தால் உருவாக்கப்படும் ஒப்பந்தம் ஆகும்.

## பகுதி – ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ) தொழிலின் நோக்கங்களை விவரி.

1. பொருளாதார நோக்கங்கள்
   - தொழில்களின் பொருளாதார நோக்கம் என்பது, இலாபம் ஈட்டுவதே என்றாலும், இலாபம் ஈட்டுவதற்கு நுகர்வோரை உருவாக்குவதல், புதிய நுட்பங்களை கண்டுபிடித்தல், வளங்களை முழுமையாக பயன்படுத்துதல் போன்றவைகளே மிக முக்கியமானதாகும்.
2. சமூக நோக்கங்கள்
   - சமூக நலனை பேணுவது என்பது, சில தொழிலமைப்புகளை, அறிய வகைகளை, சமுதாயத்திற்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தப் படவேண்டும்.
   - எந்த தொழில் நடவடிக்கைகளையும் சமுதாயத்திற்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் அமையக் கூடாது.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

3. நிறுவன நோக்கங்கள்
   - தொழிலமைப்பின் மிக முக்கிய நோக்கம் , பொருளாதாரத்திற்கு உதவும் வகையில் தொடர்ந்து செயல்பாடுகள் அமையப் பெறவேண்டும்.
4. மனித நோக்கங்கள்
   - தொழிலமைப்பு, தன்னுடைய பணியாளர் நலன் மற்றும் எதிர்கால தேவையைப் நிறைவேற்றக் கூடிய வகையில் செயல்பட வேண்டும்.
   - மேலும் இயலாதவர்கள், ஏழ்மைநிலையில் உள்ளவர்கள் நலம் காக்க உதவ வேண்டும்
5. தேசிய நோக்கங்கள்
   - ஒரு நாட்டின் நோக்கம் என்பது, மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தல், அரசிற்கு வருவாய் ஈட்டுதல், சரக்கு மற்றும் சேவை உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியவை மிக முக்கியமானதாகும்.

( அல்லது )

41. ஆ) கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி.

i) நிறுவனத்தின் பெயர்
ii) வணிகத்தின் தலைமையிடம்
iii) பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம்
iv) அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
v) ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள் மற்றும்
vi) கூட்டாண்மையின் காலம்

- மேற்காணும் அறிக்கையை தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பம் இட்டு, பதிவாளரிடம் பதிவுக்கட்டணம் ரூ.3 செலுத்தி, சமர்ப்பிக்க வேண்டும்.
- மேற்காணும் அறிக்கையில், மாற்றம் செய்ய விரும்பினால், பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்கவேண்டும்.

42. அ) கூட்டுறவு சங்கத்தின் வகைகளை கூறுக? ( ஏதேனும் 5 )

1) நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்
   - இது நுகர்வோர்களால் ஆரம்பிக்கப் படுகின்றது.
   - இந்த சங்கங்கள் மற்ற சில்லறை வணிகர்களை இலாப ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாக கொள்ளாமல், மக்களுக்கு தரமான பொருட்களை, சிறந்த விலையில் வழங்குவதை நோக்கமாக கொண்டு இயங்கி வருகின்றன.
   - கூட்டுறவு சிறப்பங்காடி, மாணவர்கள் கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு மளிகை சங்கங்கள் போன்ற சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவின் ஒரு வடிவம் ஆகும்.
2) உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
   - உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுவது, உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் ஆகும்.
   - இவ்வகை உற்பத்தி சங்கங்கள், செலவை குறைத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாக திரட்டி, ஒட்டு மொத்தமாக சந்தை இடுகின்றன.
   - கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம், கூட்டுறவு தீப்பெட்டி தயாரிப்பாளர் சங்கம், தச்சு தொழிலாளர் கூட்டுறவு சங்கம் போன்ற சங்கங்கள் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்திற்கு உதாரணமாக விளங்குகின்றன.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

3) <u>கூட்டுறவு சந்தையிடுகை சங்கங்கள்</u>

- ❖ கூட்டுறவு சந்தையிடு சங்கம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மொத்தமாக திரட்டி அவைகளை சந்தையிடும் நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம்.
- ❖ இச்சங்கங்கள் முடிவுற்ற பொருட்களை தரம் பிரிப்பது, பண்டகத்தில் வைத்து காப்பது, விளம்பரம் செய்வது, கட்டுவது, ஏற்றுவது, அனுப்பி வைப்பது போன்ற சந்தையிடல் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் சங்கமாகும்.

4) <u>கூட்டுறவு கடன் சங்கங்கள்</u>

- ❖ உறுப்பினர்கட்கு குறுகியகால கடன் வழங்குதல் தேர்ச்சி பெற்ற சங்கம் கடன் சங்கம் ஆகும்.
- ❖ வேளாண்மையினர், கைவினைஞர்கள், தொழில் புரிபவர்கள், ஊதியம் ஈட்டுகிறவர்கள் போன்றோர்க்கு கடனளிக்கும் உன்னத பணியை கடன் சங்கங்கள் நல்கிவருகின்றன.

5) <u>வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள்</u>

- ❖ உறுப்பினர்களுக்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத் தரும் சங்கங்களே வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் எனப்படுகிறன.
- ❖ சொந்தமாக வீடு கட்ட விழையும் அன்பர்கள் அனைவரும் ஒன்று திரணடு வீடுகட்ட கூட்டுறவு சங்கங்களை நிறுவுகின்றனர்.

6) <u>உழவர் கூட்டுறவுச் சங்கங்கள்</u>

- ❖ உள்ளூரில் இருக்கும் வேளாண் குடிகள், தங்களின் நிலங்களை, தனித் தனியே பயிரிடுவதற்கு பதிலாக , அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து, பேரளவில் விவசாயம் செய்ய உதவும் சங்கம், கூட்டுறவு உழவு சங்கம் எனப்படும்.
- ❖ நிலத்தை பங்காக கொடுத்த விவசாயிகளுக்கு வாடகையும் , கூட்டாக திரட்டிய நிலத்தில், உழைத்ததற்கு கூலியும் பெறுவார்கள்.
- ❖ இம்முறை ரஷ்யாவில் மிகவும் வெற்றி கண்டது.

( அல்லது )

42. ஆ) **துறைவாரி நிறுவனங்களின் நன்மைகளை விவரி.** ( ஏதேனும் 5 )

1) <u>எளிமையான அமைப்பு</u>

- ❖ இதனை அமைப்பது எளிது.
- ❖ இவ்வமைப்புகளை நிர்வாக முடிவு எடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்.

2) <u>பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு</u>

- ❖ இதனை, பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும்.
- ❖ அத்துறை அமைச்சரே இதற்கு பொறுப்பாவார்.

3) <u>இரகசியம் காத்தல்</u>

- ❖ பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவை அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும்.
- ❖ அப்போதுதான் அத்துறைகளில் பணியாளர்கள், தங்களது பணிகள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க முடியும்.

4) <u>பொது மக்களுக்கு வரிச்சுமை குறைவு</u>

- ❖ இத்தொழில் நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால், பொதுமக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்



5) <u>சமூக மாற்றத்திற்கான கருவி</u>

- ❖ அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக நீதியை, அரசுத்துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும்.
- ❖ ஆகவே, அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த, துறை நிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன.

43. அ) **வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை பணிகளை விளக்குக.** ( ஏதேனும் 5 )

* இந்தச் சேவைகளைப் பொதுவாக,

I. முகமைப் பணிகள் மற்றும் II. பொதுப் பயன்பாட்டுப் பணிகள் என வகைப்படுத்தலாம்.

I. <u>முகமைப் பணிகள்</u>

- ❖ வங்கிகள் வாடிக்கையாளர்களின் முகவர்களாகச் செயல்பட்டுச் சில சேவைகளை வழங்குகின்றன. அவை முகமை செயல்பாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு,

1. <u>நிதி பரிமாற்றம்</u>

- ❖ வங்கிகள் கேட்பு வரைவோலைகள், காசோலைகள், பயணிகள் காசோலைகள் பொன்றவைகளை வெளியிடுவதுடன்,
- ❖ ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நிதிகளை மாற்ற உதவுகிறது.
- ❖ இந்தச் சேவைக்காக வங்கிகள்,ஒரு சிறிய தரகுத் தொகையைப் பெற்றுக் கொள்கிறது.

2. <u>காலமுறையில் செலுத்தும் முனைமம், வாடகை, முதலியன</u>

- ❖ வாடிக்கையாளர்களிடமிருந்து வரும் அறிவுறுத்தலின்படி, காப்பீட்டு முனைமம், வாடகை, தொலைபேசி கட்டணம் பொன்றவைகளை வாடிக்கையாளர் கணக்கிலிருந்து மாதந்தோறும் செலுத்தும் பணியை வங்கிகள் எடுத்துக் கொள்கின்றன.

3. <u>காசோலைகள் பெறுதல் மற்றும் செலுத்தல்</u>

- ❖ வாடிக்கையாளர்களின் சார்பாக வங்கிகள்,மற்ற வங்கிகளின் காசோலைகளை வசூலித்து, வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவு வைக்கிறது.
- ❖ இதேபோல் வாடிக்கையாளரால் வழங்கப்பட்ட காசோலை சரிபார்க்கப்பட்டவுடன் வாடிக்கையாளர் அறிவுறுத்தல்படி பணம் வழங்கப்படுகிறது.

4. <u>வருமான வரிக் கணக்கைத் தயாரித்தல்</u>

- ❖ வாடிக்கையாளர்களின் சார்பில், வங்கிகள் வருமானவரிக் கணக்கினை ஆண்டுதோறும் தயாரிக்கின்றன.
- ❖ அவர்களுக்கு வரி சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குகின்றன.

5. <u>அந்நியச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுதல்</u>

- ❖ வாடிக்கையாளர்களின் சார்பில், வங்கிகள் வெளிநாட்டு நாணய மதிப்பை வாங்குதல் மற்றும் விற்றல் பணியை செய்கிறது.

6. <u>தொடர்பாளராகச் செயல்படுதல்</u>

- ❖ வாடிக்கையாளர்களுக்கு தொடர்பாளராகச் செயல்பட்டு, பயணச் சீட்டு, கடவுச் சீட்டு போன்றவைகளைப் பெறுகிறது.

( அல்லது )



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

43. ஆ) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக. ( ஏதேனும் 5 )

1) நீண்ட தூரத்திற்கு, கனரக மற்றும் பருமனான பொருட்களை சுமந்து செல்லுவதற்கு மிகவும் பொருத்தமானது.
2) தடையற்ற சேவைகளால், நீண்ட தொலைவு பயணத்தை, பகல் மற்றும் இரவு முழுவதும் வழங்க முடியும்.
3) இது ஒரு வழக்கமான கால அட்டவணையுடன், ஆண்டு முழுவதும் கிடைக்கிறது.
4) இது மழை அல்லது வெயிலான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்படாத சேவைகளை வழங்குகிறது.
5) மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட பொருட்களுக்கு சிறந்த உற்பத்தி மற்றும் பாதுகாப்பை வழங்க முடியும்.
6) ஆரம்ப முதலீடு பெரியதாக இருந்தாலும், தொடர் வண்டி ஓட்ட செலவினங்கள், தொடர் வண்டியில் மிகக் குறைவாக இருக்கும்.
7) சரக்குகள், பொதுவாக மூடப்பட்ட பெட்டிகளில் சுமந்து செல்லப்படுவதால் வெயில் மற்றும் மழை போன்றவைகளால் பாதிக்கப்படுவது கிடையாது.
8) அதிக வேகத்துடன், நீண்ட தூரத்தில் சரக்குகளை சுமந்து செல்வதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட, குறைவான நேரமே தேவைப்படுகிறது.

---

44. அ) ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரி.

1) <u>கடன் ஏடுகளை பராமரித்தல்</u>:
   - ❖ தனது வாடிக்கையாளரான வணிகரின் ஏட்டுக்கடன்களை பராமரிக்கும் முழுப் பொறுப்பினை தனி உரிமைப் பேராளான் ஏற்றுக்கொள்கிறார்.
2) <u>கடன் எல்லைகளை நிர்வகித்தல்</u>:
   - ❖ வாராக்கடன் தொடர்பான நிதிச் சுமையைத் தனி உரிமைப் பேராளன் ஏற்றுக் கொள்கிறார்.
   - ❖ இதனால் வணிக தன்மையுடைய முதன்மை வணிகத்தின் மீது முழுக்கவனம் செலுத்துகிறார்.
3) <u>ரொக்க முன்பணம்</u>:
   - ❖ கடன் விற்பனையில் ஏறக்குறைய 80 விழுக்காடு முன்கூட்டியே வணிகர் பெற்று விடுகிறார்.
   - ❖ இதனால் தன்னுடைய வியாபார நீர்மைத் தன்மை பாதிக்கப்படுவதில்லை.
4) <u>வசூல் சேவை</u>:
   - ❖ வாடிக்கையாளர்களுக்கு நினைவுகூறச் செய்தல், பகுதியளவு கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல், ஏனைய சேவைகளும் இந்த நிதிச் சேவையில் அடங்கும்.
5) <u>தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறுதல்</u>:
   - ❖ தனி உரிமைபேராளர் கடந்த காலங்களில் வாடிக்கையாளர்களிடம் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் தகுதி மற்றும் வாராக்கடன் தொடர்பான வியாபார செய்திகளை உடனுக்குடன் வழங்குதல்.

( அல்லது )



44. ஆ) உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? ( ஏதேனும் 5 )

| வ.எண் | வேறுபாட்டின் அடிப்படைகள் | உலகளாவிய வைப்பு இரசீது GDR | அமெரிக்க வைப்பு இரசீது ADR |
|---|---|---|---|
| 1 | மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும் |
| 2 | யாருக்கு இது வெளியிடப் படும் | ஒன்று அல்லது அதற்கு மேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும் | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும் |
| 3 | எங்குப் பட்டியலிடப் படும் | அமெரிக்கா தவிர்த்த, இதர பங்கு மாற்றகங்களில் பட்டியலிடப் படும் | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப் படும் |
| 4 | ஒப்புதல் | இதனை வெளியிட, அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவை இல்லை | இதனை வெளியிட, அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்ககத்தின் ஒப்புதல் தேவை. |
| 5 | வெளியீட்டு வழிமுறை | இவை, பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். | இவை, சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும் |
| 6 | மாற்றுகைத் தன்மை | உலகம் முழுவதும் மாற்றகூடியது | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது |

---

45. அ) முத்ரா வங்கி - விளக்குக.

- ❖ முத்ரா வங்கி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்ய உதவுகிறது
- ❖ புதிய தொழில் தொடங்குபவர்கள் சந்திக்கும் நிதி பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், ரூ. 20 ஆயிரம் கோடி முதலீட்டுடனும், ரூ.3 ஆயிரம் கோடி கடன் உத்திரவாத நிதியுடனும் மத்திய அரசால் 'குறுந்தொழில் பிரிவுகள் வளர்ச்சி மற்றும் மறுநிதி அளிப்பு முகமை' (முத்ராவங்கி) தொடங்கப்பட்டது.
- ❖ குறுந்தொழில் முனைவோர் தங்களின் புதிய தொழிலைத் தொடங்கவும்,
- ❖ தொழிலை மேம்படுத்தும் நிலையில் நிதி நாடுவோர், தொழிலை மேம்படுத்தவும்,
- ❖ தொழிலை அடுத்த வளர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்வோர், தங்களின் தொழிலை விரிவு படுத்திக் கொள்ளவும் முத்ரா வங்கி கடன்களை வழங்குகிறது.

( அல்லது )



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**45. ஆ) சில்லறை வியாபாரிகளின் வகைகள விவரி. ( ஏதேனும் 5 )**

1) **சுமை தூக்கி மற்றும் கூவி விற்கும் வியாபாரிகள்**
   - ❖ பொருள்களைதம் தலையிலோ அல்லது முதுகிலோ தூக்கிக்கொண்டு வீடு வீடாக நடந்து சென்று வியாபாரம் செய்பவர்கள் சுமைதூக்கி வியாபாரிகள் என அழைக்கப்படுவர்.
   - ❖ ஏதேனும் ஒரு வசதியான வண்டியில் பொருட்களைவைத்து பேருந்து நிலையம், தொடர்வண்டி நிலையம், குடியிருப்புகள் மற்றும் பொது இடங்களுக்குச் சென்று கூவிக்கூவி விற்பனை செய்பவர்கள் கூவி விற்கும் வியாபாரிகள் என்பர்.

2) **நடைபாதை வியாபாரிகள்**
   - ❖ வீதிகள் குறுக்கிடும் இடங்களின் ஓரங்களிலும், நடைபாதைகளிலும் தற்காலிகமாக பூ, பழம், காய்கறி, புத்தகங்கள் போன்றவற்றை கொண்டுவந்து விற்பனை செய்பவர்கள் நடைபாதை வியாபாரிகள் எனப்படுவர்.

3) **சந்தை வியாபாரிகள்**
   - ❖ ஒரு குறிப்பிட்ட நாளிலோ அல்லது தேதியிலோ என நடைபெறும் சந்தைகளுக்குச் சென்று விற்பவர்கள் சந்தை வியாபாரிகள் எனப்படுவர்.
   - ❖ குறைந்த விலையுடைய ஒரு குறிப்பிட்ட வகையான அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் மட்டும் இவர்கள் வியாபாரம் செய்வர்.

4) **இடம்பெயர் வியாபாரிகள்**
   - ❖ மக்கள் நெருக்கம் மிகுந்த வியாபாரம் நடக்குமிடங்களில் தற்காலிகமாக கடை வைத்து சில நாட்கள் மட்டும் தங்கி இருந்து விற்பனை செய்பவர்கள் இடம்பெயர் வியாபாரிகள் எனப்படுவர்.

5) **தெருக்கடை வியாபாரிகள்**
   - ❖ மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள தெருக்களின் முனைகளிலோ, திரும்பும் இடங்களிலோ கடை அமைத்து ஆடைவகைகள், பொம்மைகள், தின்பண்டங்கள், குளிர் பானங்கள் போன்றவை விற்பவர்கள் தெருக்கடை வியாபாரிகள் என்பர்.

6) **பொதுப் பண்டகசாலை**
   - ❖ நுகர்வோர் தங்கள் வீட்டின் அருகிலேயே தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு ஏற்றவாறு அனைத்து வகைப் பொருட்களையும் குறைந்த அளவில் வாங்கி வைத்து வியாபாரம் செய்யும் இடம் பொதுப் பண்டகசாலை எனப்படும்

7) **ஒரே வகை பண்டக சாலை**
   - ❖ ஒரு குறிப்பிட்டவகை பொருட்களை மட்டுமே விற்பனை செய்யும் சில்லறை வியாபாரம் ஒரே வகை பண்டகசாலை எனப்படும்.
   - ❖ ஆயத்த ஆடைகள் மட்டும் விற்கும் கடைகள், காலனிகள் மட்டும் விறகும் கடைகள் எழுதுபொருட்கள் மட்டும் விற்கும் கடைகள், அறைகலன் மட்டும் விற்கும் கடைகள் போன்றவை இதில் அடங்கும்.

8) **சிறப்பு பண்டக சாலைகள்**
   - ❖ ஒரு வகைப் பொருட்களில் ஒரு குறிப்பிட்ட வழி பொருள்களை மட்டும் விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள் சிறப்பு பண்டகசாலைகள் எனப்படும்.
   - ❖ இனிப்பு வகையில் அல்வா மட்டும் விற்போர், துணிக்கடையில் குழந்தை ஆடைகள் மட்டும் விற்போர் முதலியன அடங்கும்

9) **பயன்படுத்திய பொருட்கள் விற்போர்**
   - ❖ பயன்படுத்திய பொருட்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்கள் முதல் தரமல்ல என்று ஒதுக்கிய பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வோர் பயன்படுத்திய பொருட்கள் விற்போர் என்படுவர்.
   - ❖ அறைகலன், புத்தகங்கள், பாத்திரங்கள், ஆடைகள், வாகனங்கள் உள்ளிட்டவை இவ்வாறு விற்கப்படுகின்றன.



**நிலையிட பேரளவு சில்லறை வியாபார நிறுவனங்கள்**

❖ பேரளவு நிலையிடச் சில்லறை வியாபார நிறுவனங்கள் பின்வருமாறு.

1. துறைவாரிப் பண்டக சாலைகள்
2. மடங்குக் கடைகள்
3. சிறப்பங்காடிகள்
4. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்
5. வாடகைக் கொள்முதல் மற்றும் தவணைமுறை விற்பனை நிலையங்கள்
6. அஞ்சல்வழி விற்பனையகங்கள்
7. தானியங்கி விற்பனை எந்திரங்கள்
8. வணிக வளாகங்கள்
9. தொலைத் தொடர்புச் சந்தை
10. மின்னணு வழி வர்த்தகம்

**46. அ) பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகளை குறிப்பிடுக. ( ஏதேனும் 5 )**

1) இது பன்னாட்டு அளவில் குறுகிய கால கடன் நிறுவனமாக செயல்படுகிறது.
2) இது பரிமாற்ற விகிதங்களின் சாதாரண வழிகாட்டுதல்களை செய்வதற்கு உதவுகிறது.
3) இது உறுப்பு நாடுகளின் நாணயங்களை தன்னகத்தே வைத்துள்ளது. அதிலிருந்து கடன் வாங்கக் கூடிய உறுப்பினர் நாடுகள், நாணய மதிப்பை பெற்றுக்கொள்ளலாம்.
4) நல்ல வலுவான பொருளாதார மற்றும் நிதிக் கொள்கையை பின்பற்றும் நாடுகளுக்கு பொருளாதார நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய வளர்ச்சிக்கும் வழி வகுக்கிறது.
5) உறுப்பினர் நாடுகளின் வாணிக சமநிலையில் ஏற்படும் சமமற்ற தன்மையைச் சரி செய்ய உதவுகிறது.
6) உறுப்பு நாடுகளில் பயனுள்ள கொள்கைகளை வலுப்படுத்தவும், செயல்படுத்தவும் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி அளிக்கிறது. வங்கியியல், நிதி, நாணய மற்றும் பரிமாற்றக் கொள்கைகளை வடிவமைப்பதில் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகிறது.

**( அல்லது )**

**46. ஆ) சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தம் ஒன்றின் இன்றியமையாத கூறுகள் யாவை? ( ஏதேனும் 5 )**

1. **முனைவும் ஏற்பும்**
   - ❖ ஒரு ஒப்பந்தத்திற்கு இரண்டு நபர்கள் தேவை.
   - ❖ அவர்களில் ஒரு நபர் முனைவும் மற்றொருவர் ஏற்பும் செய்கின்றனர்.
2. **சட்ட உறவு முறை**
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உள்நோக்கம், தங்களுக்கிடையே ஓர் சட்ட உறவுமுறை உருவாக்குவதற்காக இருக்க வேண்டும்.
   - ❖ சமூக தன்மையுடைய உடன்படிக்கைகளில் , சட்ட உறவுமுறை இல்லை என்றால் ஒப்பந்தங்களாக முடியாது.
3. **சட்டபூர்வமான மறுபயன்** ( பிரிவு 2d )
   - ❖ மறுபயன் என்பது, எதையேனும் திரும்பப்பெறுதல் ஆகும்.
   - ❖ மறு பயன் இல்லாத உடன்படிக்கை, செல்லாத உடன்படிக்கையாகும்



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

4. சட்டபூர்வமான நோக்கம் ( பிரிவு 23 )
   - ❖ உடன்பாட்டின் நோக்கம், சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும்.
   - ❖ இதன் நோக்கம், சட்டத்துக்கு புறம்பானதாகவோ அல்லது ஒழுக்கக் கேடானதாகவோ அல்லது பொது நலனுக்கு எதிராகவோ இருக்கக்கூடாது.
5. தன்னிச்சையான இசைவு ( பிரிவு 13 மற்றும் 14 )
   - ❖ உடன்படிக்கை, நபர்களின் தன்னிச்சையான இசைவால் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் இசைவு தர வேண்டும்.
   - ❖ அவர்கள் ஒரு விஷயத்தை ஒரே நேரத்தில், ஒரே நோக்குடன் உடன்பட வேண்டும். அதாவது, ஒருமித்த கருத்து இருக்க வேண்டும்.
6. ஒப்பந்த தகுதி ( பிரிவு 11 )
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடத் தேவையான தகுதி உடைய நபர்களால், மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தம் ஆகிறது.

ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர்கள்

1 சட்டப்படி உரிமை வயது அடைந்தவர்
2 மனச்சமநிலை உடையவர்
3 சட்டத்தினால் தகுதியற்றவர் என அறிவிக்கப் படாத நபர்கள்.

7. சட்டத்தால் செயல்படுத்தும் திறன்
   - ❖ சட்டத்தால் செயல்படுத்தும் திறன் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
   - ❖ சட்டத்தால் சில உடன்படிக்கைகள், சட்ட விரோதமானது அல்லது செல்லாது என வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

47. அ) நேரடி மற்றும் மறைமுக வரியை உதாரணத்துடன் விளக்குக.

(அ) நேரடி வரி
- ❖ தனி நபரின் வருமானம் அல்லது அவரின் செல்வத்தின்மீது விதிக்கப்பட்டு, அவரால் செலுத்தப்படும் வரி நேர்முக வரிகள் ஆகும்.
- ❖ இந்தியாவில் அனைத்து நேரடி வரிகளும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

உதாரணங்கள்

1) வருமான வரி 2) சொத்து வரி 3) மூலதன ஆதாய வரி
4) பத்திர பரிவர்த்தனை வரி 5) பயன்கள் வரி

(ஆ) மறைமுக வரி
- ❖ சரக்கு மற்றும் சேவைகளை வழங்கும் விற்பனையாளர் மீது, வரி விதிக்கப்பட்டு, அவற்றை வாங்குபவரால் செலுத்தப்படும் வரியே மறைமுக வரி ஆகும்.

உதாரணம் : சரக்கு மற்றும் சேவை வரி (GST)

( அல்லது )



47. ஆ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.

1) மத்திய சரக்கு மற்றும் சேவை வரி
- ❖ சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017 - ன் கீழ், ஒரு மாநிலத்திற்குள்ளேயே அளிக்கப்படும் சரக்குகள் மீது, மத்திய அரசால் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும்.

2) மாநில சரக்கு மற்றும் சேவை வரி.
- ❖ தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017 - ன் கீழ், மாநில அரசால் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும் .

3) யூனியன் பிரதேசத்திற்கான சரக்கு மற்றும் சேவை வரி
- ❖ UGST சட்டம் 2017 - ன் கீழ், இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களில் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும்.

4) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி
- ❖ IGST சட்டம் 2017 - ன் கீழ், மத்திய அரசால் சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு, மாநில அரசுகளுக்கிடையே வருவாய் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

5) ஏற்றுமதி மீதான ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி
- ❖ சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் அனைத்து ஏற்றுமதிகளும் மாநிலங்களுக்கு இடையேயான அளிப்பாக கருதப்படுகிறது.
- ❖ ஏற்றுமதிகள் பூஜ்ஜியம் வீத வரி என்பதால், இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து சரக்கு மற்றும் சேவைகளின் மீது சரக்கு மற்றும் சேவை வரி சுமத்தப்படுவதில்லை.
- ❖ ஏற்றுமதி மீது செலுத்தப்படும் அனைத்து உள்ளீட்டு வரிகளும் திருப்பிக் கொடுக்கப்படுகிறது.



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com